[2012 பிப்ரவரி 3

36—

பணிமனை

***473—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து தரக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நிலம் கிடைக்கப்பெற்றதும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று திருமயத்தில் புதிய பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடை திறந்த வெள்ளம்போல், கடைக்கோடி மக்களெல்லாம் அடைந்தது போன்ற மகிழ்ச்சி. மகிழ்ச்சியைத் தந்தது அம்மா அவர்களின் ஆட்சி. மடை திறந்த வெள்ளம் போன்று மட்டற்ற களப் பணிகளை விரைந்து முடித்ததால் பெற்றிட்ட மட்டற்ற மகிழ்ச்சிக்கு அளவுதான் இல்லையே அம்மா! எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில், திருமயத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத்தலமான ஊமையன்கோட்டையில் பல்லவ மன்னரால் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான சிவபெருமான் குடவரை ஆலயங்கள், ஓரே சுற்றுச் சுவருக்குள் கல்லிலே கலைவண்ணம் கொண்ட பெருமைமிகு*

2012 பிப்ரவரி 3]

திருமயத்தில், சிறப்புமிகு வைணவத்தலமாக விளங்கும் திருமயத்தில், 5 ஏக்கர் நிலம் கிடைத்தவுடன் அந்தப் பேருந்து பணிமனை அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் போக்குவரத்துக் கழகப் பணிமனை, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. நமது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுராந்தகம் நகரத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கட்டடம் கட்டித் தருவாரா என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதற்குண்டான நிலம் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான தென்காசி தொகுதி, வி.கே. புதூர் வட்டம், சுரண்டையிலிருந்து சேந்தமங்கலம் வழியாக சங்கரன்கோவில், புளியங்குடிக்கும், வாரியூர், வரங்குன்றாபுரம், ஊத்துமலை, கலங்கல் வழியாக சங்கரன்கோவிலுக்கும், வி.கே. புதூர், அத்தியூத்து, ஆலங்குளம் வழியாக திருநெல்வேலிக்கும், ஆயக்குடிக்கும், சாம்பவர் வடகரை வழியாக செங்கோட்டைக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், சுரண்டையிலிருந்து தினந்தோறும் பேருந்துகள் புறப்படவும், இரவில் பேருந்துகள் நிறுத்தும் இடமாகவும் உள்ளது. எனவே, தென்காசி தொகுதி, வி.கே. புதூர் வட்டம்,*

சுரண்டையில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆணையிடுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உரிய நிலம் கிடைக்கப்பெறும்பட்சத்தில், ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

கட்டட வசதி

***2390—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், திசையன்விளை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.6 இலட்சம் செலவில் புறநோயாளிகள் பிரிவுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், தடுப்பூசி அறை கட்ட ரூ.3.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.